World Christian Fellowship
www.wcflondon.com
wcflondon@gmail.com

# யோவேலின் புத்தகம்

**பெயரின் அர்த்தம்** *: தேவன் இருக்கிறவராகவே இருக்கிறார். தேவனே ஆண்டவர்.*

**எழுதிய வருடம்** *: 835 - 700 கி.மு , 10 வருடம் கழித்து ஒபதிய என்னும் தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் உரைத்து "கர்த்தருடைய நாள்" என்னும் வாக்கியத்தை உபயோகப்படுத்துகிறார்.*

*ஒபதியா, எதிரி தேசத்தாராகிய எதோமிற்கு தீர்கத்தரிசனம் உரைத்தார். அதேசமயம் யோவேல், யூதா தேசத்தாருக்கு தீர்க்கதரிசனம் உரைத்தார். ஆனால், நீங்கள் கவனித்து பார்த்தால் இருவரும் சொன்ன செய்தி ஒரே மாதிரியானவை.*

*தென்பகுதி யூதாவின் இராஜியபாரத்தில் எந்த ஒரு எச்சரிப்புமின்றி வந்த பேரழிவில் ஒரு சில மணி நேரத்திற்குள் எல்லாம் பாழாகி போனதுமல்லாமல் அந்த இடம் முழுவதும் வெறுமையாகிவிட்டது.*

*இந்த புத்தகம் 3 அதிகாரங்களையும் 73 வசனங்களையும் அடக்கியுள்ளது.*

**வரலாற்று பின்னணி***:*

*ஏதோம் தேசத்தின் மீதான நியாயத்தீர்ப்பை*
*தீர்க்கதரிசனமாக ஜனங்கள் கேட்ட பொழுது அவர்கள்*

*சந்தோஷமடைந்தார்கள். ஆனால் தேவன் தம்முடைய தேசத்தை நியாயம் விசாரிக்கிறார் என்கிற செய்தியை அவர்கள் கேட்ட பொழுது கோபப்பட்டார்கள*

*வெட்டுக்கிளிகள் வந்து அவர்களுடைய பயிர்களை எல்லாம் அறித்துப்போட்டது.*

*அவைகள் 500 மில்லியன் கணக்கில் ஒரேநேரத்தில், சூரியனை மறைக்கும் அளவிற்கு பெருங்கூட்டமாக சேர்ந்து ஒரு நிமிடத்தில் இருளை ஏற்படுத்திவிடுமாம். ஒரு நாளைக்கு 80,000 டன்கள் உணவை உண்டு, ஒரு நாளில் 10 மைல்களை கடந்துசெல்லக்கூடியவை.*





**நோக்கம்**:

*அநீதியுள்ளவர்கள் மேல் தேவனுடைய பயங்கரமான கோபம் வரும்போது தண்டிக்கப்படுவார்கள் ஆகையால் அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்றும் அப்படி அவர்கள் மனந்திரும்பாவிட்டால் நியாயதீர்ப்பின் நாளன்று தேவனுடைய கோபத்தை சந்திக்க நேரிடும் என்று யோவேல் ஏதோம் தேசத்தாரை கேட்டுக்கொண்டார்.*

*தேவன், சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கத்தக்க புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று தாவீது ராஜாவிடம் வாக்கு பண்ணினார்.*

***1 இராஜாக்கள் 2:4, [3]நீ என்ன செய்தாலும், நீ எங்கே போனாலும், எல்லாவற்றிலும் புத்திமானாயிருக்கிறதற்கும், கர்த்தர் என்னைக் குறித்து: உன் பிள்ளைகள் தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் எனக்கு***

***முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்குத் தங்கள் வழியைக் காத்துக்கொண்டால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கத்தக்க புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்ன தம்முடைய வார்த்தையைத் திடப்படுத்துகிறதற்கும்,***

***அத்தாலியாள்*** *என்பவள் கி.மு 842-836 களில் யூதாவின் ராஜாத்தியாக இருந்தாள் என்று பார்க்கிறோம். இவள், இஸ்ரவேலின் வடபகுதியை இராஜியபாரம் பண்ணின* ***ஆகாப் ராஜா*** *மற்றும்* ***யேசபேல்*** *என்பவர்களின் குமாரத்தி. மற்றும் இவள்* ***யோராம்*** *என்னும் ராஜாவின் மனைவியும்,* ***அகசியா*** *ராஜாவின் தாயுமானவள்.*

*யூதாவின் ராஜாவான யோசபாத்தின் குமாரனான யோராம், பாகால் வழிபாட்டை அவனுடைய ராஜ்யத்திலே அறிமுகப்படுத்தினான். (கி.மு. 891)***.** *மகா பெரிய புரட்சிக்கு பின்பு யெகூ சமாரியாவிலே தன்னுடைய இராஜ்ஜிய பாரத்தை அமைத்துக்கொண்டான். யெகூவின் பட்டயத்துக்கு தப்பின யூதா குடும்பத்திலுள்ள ராஜவம்சமான யாவரையும் அத்தாலியாள் சங்காரம்பண்ணினாள். (2 இராஜாக்கள்11:1- 4 மற்றும் 2 நாளாகமம் 22:10-12 மற்றும் 2 நாளாகமம் 23 ல் அத்தாலியளுடைய முழு வாழ்க்கைப் பற்றியும் அவளுடைய ஆட்சியைப்பற்றியும், மரணத்தைப்பற்றியும் வாசித்து தெரிந்துகொள்ளலாம் )*

*படுகொலை செய்யப்பட்டவர்களில் அகசியாவின் கடைசி மகனான யோவாஸ் என்னும் குழந்தையானவன் மாத்திரம் அவனுடைய தகப்பனின் சகோதிரியும், ஆசாரியனாகிய யோய்தாவின் பெண்ஜாதியுமான யோசேபியாத் என்பவளால் காப்பாற்றப்பட்டான்.* (2 *நாளாகமம் 24:6)*

*இந்த குழந்தை யோய்தாவின் பாதுகாப்பிலே வளர்க்கப்பட்டு, ஆறு வருஷமாய் கர்த்தருடைய ஆலயத்திலே ஒளித்துவைக்கப்பட்டான். அத்தாலியாள் யூதா தேசத்தின்மேல் ராஜ்யபாரம்பண்ணினாள். கடைசியாக, யோய்தா விசுவாசமாய் தாவீதின் வீட்டில் ஜனங்கள் கர்த்தருக்காய் வைராக்கியாமாய் தொழுது கொள்ளும்படிக்கு ஒரு அதிகாராமுள்ள ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்தான். அவனுடைய திட்டம் வெற்றியாய் அமைந்தது மற்றும் அத்தாலியாளை யோவேலின் தீர்க்கதரிசனத்தின்படி கொன்று போட்டான். இதுவே யோவேல் தேசத்தை மனந்திரும்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டதிர்க்கான காரணம், ஆனால் ஒரு முறை கூட எதற்காக மனந்திரும்ப வேண்டும் என்று குறிப்பிடவில்லை.*

***சுருக்கமான கண்ணோட்டம்**:*

***பாடம்** 1*

1. *வேட்டுகிளிகளினால் தேசம் அழிக்கப்படுதல் (வசனம் 1-12)*
2. *ஜனங்களுடைய மனந்திரும்புதல் (வசனம் 13-27)*

***பாடம்** 2: **கர்த்தருடைய நாள்***

1. *மீண்டும் அழிவு (V1-11)*
2. *மனந்திரும்புதல் (V12-17)*
3. *தேசத்தின் புத்துணர்ச்சி (வசனம் 18-27)*
4. *புதுப்பித்தல் (வசனம் 28-32)*

***பாடம்** 3: **தேவனுடைய நியாயத்தீர்ப்பு***

1. *தேசங்களின் பதிலடி (வசனம்1-15)*

*2. தேவனுடைய ஜனங்கள் மேலுள்ள ஆசீர்வாதம் (வசனம் 16-21)*

*அப்போஸ்தலனாகிய பேதுரு தன்னுடைய முதல் பிரசங்கத்தில் பழைய ஏற்பாட்டில் காணப்படுகிற அனைத்து தீர்க்கதரிசனங்களில் ஒன்றை மாத்திரம் அவர் பிரசங்கித்தார். நசரேனாகிய இயேசுவே "இஸ்ரவேலின் மேசியா" என்கிற தீர்க்கதரிசனத்தை யூதர்களுக்கு, காண்பிக்க வேண்டும் என்பதே அவர் மனதில் முக்கியமான காரியமாக இருந்தது.*

*பேதுரு பிரசிங்கிப்பதற்கு எந்த தீர்க்கதரிசனத்தை உபயோகித்தார்?*

*யோவேலின் தீர்க்கதரிசனம், கி.பி.30ல் பெந்தேகோஸ்தே நாளன்று, இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்டு 50 நாளைக்கு பின்பு மற்றும் அவர் மரணத்தினின்று உயிர்த்தெழுந்ததை பற்றியும் பிரசிங்கித்தார்.*

*கர்த்தருடைய நாளைப்பற்றி **யோவேல் புஸ்தகத்திலிருந்து 2** ஆம் அதிகாரத்தை உபயோகப்படுத்தியிருக்கிறார்.*

***அப்போஸ்தலர் 2:16-21,** [16]**தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது.** [17]**கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்;** [18]**என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய***

***ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்.*** [19]***அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும், தாழ பூமியிலே இரத்தம், அக்கினி, புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவேன்.*** [20]***கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்.*** [21]***அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்***

*அப்போஸ்தலர் பவுல், ரோமருக்கு எழுதிய தன்னுடைய நிருபத்திலே யோவேல் தீர்க்கதரிசி சொன்னதை குறிப்பிட்டிருக்கிறார்.* ***ரோமர் 10:13, "ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்."***

## ***இன்றைய பயன்பாடு:***

*யோவேல் புஸ்தகத்திலும் வெளிபடுத்தின விசேஷத்திலும் பார்த்தது போல நம்முடைய வருங்ககாரியங்களை தரிசனங்களில் காண முடியும். சில சமயங்களில் நமக்கு அது மிக அரிதாக அல்லது தான்தோன்றித்தனமாக தெரிந்தாலும் நம்முடைய மயக்கத்திலிருந்து உண்மையை அறிவதற்கு தூண்டுதலாய் இருக்க வேண்டும்.*

*எனினும், அவர்களுடைய அழிவு நம்முடைய கண்களுக்கு முன்பாக தெளிந்த படமாக இருப்பதினால், ஆவிக்குரிய மயக்கத்திலிருந்து நம்மை எழுப்ப*

*வேண்டும். உங்களுடைய் வாழ்வில் மெத்தனமான அல்லது சோம்பேறித்தனமான போராட்டம் உண்டா?*

*நியாயத்தீர்ப்பு என்பது நிச்சயம் ஆனால் மனந்திரும்புதல் இல்லையென்றால் அவை கடுமையானதாக இருக்கும். ஆகையால் நம்முடைய நம்பிக்கை / விசுவாசம் எங்கே இருக்கிறது?*

*நம்முடைய நம்பிக்கை / விசுவாசம் நம்முடைய உடமைகளில் இல்லாமல் கர்த்தராகிய ஆண்டவர் மேல் இருக்க வேண்டும். தேவனால், ஜனங்களுடைய கவனத்தை எதை கொண்டும் திசை திருப்ப முடியும். ஆனால், அவர் நமக்கு அளித்திருக்கிற இரக்கமும் கிருபையும் அவருடைய உறுதியான திட்டத்தின்படி நம்முடைய இரட்சிப்பிற்காக இயேசு கிறிஸ்துவை நம்முடைய பாவங்களினிமித்தம் சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்து நம்மை நீதியுள்ள பூரணராக்கும்படி நம்முடைய பாவங்களை ஏற்றுக்கொண்டார்.*

***இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். (1 தெசலோனிக்கேயர் 5:2)***

***இப்பொழுதே இரட்சணிய நாள். (2 கொரிந்தியர் 6:2)***

***அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்; (யோவேல் 2:32)***

***[6]கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். [7]துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும்விட்டு,***

***கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார். (ஏசாயா 55:6-7)***

***நியாயத்தீர்ப்புநாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது; ஏனென்றால், அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம். (1 யோவான் 4:17)***

**தேவனுடைய இரட்சிப்பை ஏற்று கொண்டாலொழிய கர்த்தருடைய நாளன்று அவருடைய கடுங்கோபத்திற்கு நாம் தப்பித்து கொள்ள முடியும்.**

***கர்த்தருடைய <u>பெரிதும்</u> <u>பயங்கரமுமான</u> நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்.(யோவேல் 2:33)***

*நீங்கள் யார்? கர்த்தருடைய அந்த நாள் ஒன்று பெரிதும் சந்தோசமுமான நாளாயிருக்கும் அல்லது பயங்கரமும் கொடிய நாளாயிருக்கும்.*

***உங்களுக்கு இந்த கர்த்தருடைய நாள் எப்படி இருக்கும்?***